# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .97/2023 | Village: | |
| Sessions | : | Age | :30 |
| Deposition of Witness for | : LW-4/PW- 4 | Taluk | : |
| Name | : தமிழ்செல்வன் | | |
| Father's/Husband's Name | : பாலகிருஷ்ணன் | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்மன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கும்பகோணத்தில் தனியார் நிறுவத்தில் வேலை செய்து வருகிறேன். அசா1 எனது அப்பா மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பிச்சை மற்றும் ஆஜர் எதிரிகள் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். அவருக்கு கடந்த 19.02.2021ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த பிச்சை என்பவத் இறந்துவிட்டார். கடந்த 22.02.2021ம் தேதி மதியம் 3 மணிக்கு அவருக்கு பால்தெளி காரியத்திற்காக எனது அப்பா பாலகிருஷ்ணன் பிச்சை வீட்டிற்கு சென்றிருந்தார். நான் அப்போது எங்கள் வீட்டிலிருந்த போது பிச்சை வீட்டில் ஒரே சத்தமாக கேட்டது. நான்

சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி ரஞ்சித் எனது அப்பாவின் கழுத்தை பிடித்து நெறித்து கீழே தள்ளினார். நான் ஆஜர் எதிரி ரஞ்சித்திடம் ஏன் வயதானவரை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு என்னையும் அடிக்க வந்துவிட்டார். அப்போது ஊர்க்காரர்கள் சண்டையை விலக்கி விட்டார்கள். எனது அப்பாவை ஆஜர் எதிரிகள் மூவரும் குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டினார்கள். கட்டையை காண்பித்து நீ என்ன பெரிய ஆளா என்று மிரட்டி இன்றைக்கு நீங்கள் தப்பித்து விட்டீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். நான் எனது அப்பாவை அழைத்துக் கொண்டு திருவிடைமருதூர் காவல் நிலையத்திற்கு வந்து விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**மறுவிசாரணை.** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC .97/2023 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-3/PW- 3 <br> Name : நடராஜன் <br> Father's/Husband's Name : உத்திராபதி <br> Nationality : Indian | Village: <br> Age :48 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்மன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். பிச்சை மற்றும் ஆஜர் எதிரிகள் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். அவருக்கு கடந்த 22.02.2021 ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த பிச்சை என்பவருக்கு பால்தெளி முடித்துவிட்டு நாங்கள் பிச்சைவீட்டில் அமர்ந்திருந்தபோது ஆஜர் எதிரிகள் பிச்சை மனைவி மதனித்திடம் இந்த வீட்டில் எங்களுக்கும் பங்கு உள்ளது என்று பிரச்சனை செய்தார்கள். அப்போது மதனம் ஊர் நாட்டாமை மூலமாக உங்களுக்கு

சேரவேண்டி சொத்தை பிரித்து கொடுத்துவிட்டோம் என்று கூறினார். அதற்கு ஆஜர் எதிரிகள் மூவரும் அப்போது ஊர் நாட்டாமையாக இருந்த அசா1ஐ குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். ஆஜர் எதிரி ரஞ்சித் அசா1ன் குரல்வலையை பிடித்தார். அப்போது அசா1ன் மகன் தமிழ்செல்வன் வந்து எனது அப்பாவை ஏன் அடித்தாய் என்று கேட்டதற்கு நீ என்ன சப்போட்டா என்று கூறி அவரையும் கன்னத்தில் ஆஜர் எதிரி ரஞ்சில் அரைந்துவிட்டார். நாங்கள் அனைவரும் சண்டையை விலக்கிவிட்டோம். அசா1 காவல் நிலையம் சென்று புகார் அளிக்க சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC .97/2023 | Village: | |
| Sessions | : | Age | :61 |
| Deposition of Witness for | : LW-2/PW- 2 | Taluk | : |
| Name | : பாலகிருஷ்ணன் | | |
| Father's/Husband's Name | : கணபதி | Religion | : |
| Nationality | : Indian | | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்மன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அசா1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊர்க்காரர்கள். கடந்த 19.02.2021ம் தேதி எங்கள் ஊரை சேர்ந்த பிச்சை என்பவர் இறந்துவிட்டார். பிச்சை மற்றும் ஆஜர் எதிரிகள் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். அவருக்கு கடந்த 22.02.2021ம் தேதி பால்தெளி முடித்துவிட்டு நாங்கள் பிச்சைவீட்டில் அமர்ந்திருந்தபோது ஆஜர் எதிரிகள் அசா1டம் என்ன பாகம் பிரித்து கொடுத்திருக்கிறாய் என்று கேட்டு ஆஜர் எதிரி ரஞ்சிர் அசா1ன் பிடிரியை பிடித்து கன்னத்தில் ஓங்கி

அறைந்துவிட்டார். நாங்கள் அனைவரும் இருவரையும் விலக்கி விட்டோம். அப்போது அசா1ன் மகன் தமிழ்செல்வன் வந்து எனது அப்பாவை எப்படி அடித்தாய் என்று ஆஜர் எதிரி ரஞ்சித்திடம் கேட்டபோது தமிழ்செல்வனையும் கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டார். ரஞ்சித்திற்கும் தமிழ்செல்வனுக்கு தள்ளு முள்ளு ஏற்பட்டது. நாங்கள் சண்டையை விலக்கி விட்டோம். அசா1 காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC .97/2023 | Village: |
| Sessions | : | Age :58 |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Taluk : |
| Name | : பாலகிருஷ்ணன் | |
| Father's/Husband's Name | : கலியபெருமாள் | Religion : |
| Nationality | : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.07.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அம்மன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி தமிழ்செல்வன் எனது மகன். கடந்த 19.02.2021 ம் தேதி எனது ஊரை சேர்ந்த பிச்சை என்பவர் இறந்துவிட்டார். பிச்சை மற்றும் ஆஜர் எதிரிகள் அண்ணன் தம்பிகள் ஆவார்கள். அவருக்கு கடந்த 22.02.2021 ம் தேதி பால்தெளி நடைபெற்றது. ஊர்க்காரர்களுடன் பிச்சை என்பவரின் பால்தெளியை முடித்துவிட்டு அவரது வீட்டிலிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் மூவரும் திட்டிக்கொண்டே வந்தார்கள். அப்போது பிச்சையின் மனைவி மதனம் ஏன்

திட்டிக்கொண்டே வருகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் மூவரும் இந்த வீட்டில் எந்த காரியமும் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். ஏன் காரியம் எதுவும் செய்யக்கூடாது என்று மதனம் கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் மூவரும் எங்களுக்கு எந்த பாகமும் கொடுக்கவில்லை அதனால் எந்த காரியமும் இந்த வீட்டில் செய்யக்கூடாது என்று திட்டினார்கள். பின்னர் மதனம் உங்களுக்கு சேர வேண்டிய சொத்துக்களை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே ஊர் நாட்டாமைகள் மூலம் பிரித்து கொடுத்துவிட்டோம். பின்னர் ஏன் திட்டிக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அப்போது நாட்டாமையாக இருந்த என்னை குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று ஆஜர் எதிரிகள் மூவரும் திட்டினார்கள். நீ என்ன பெரிய ஆளா என்று கேட்டு ஆஜர் எதிரி ரஞ்சித் என் குரல்வளையை பிடித்து கீழே தள்ளிவிட்டார். ஊர்க்காரர்கள் அனைவரும் சண்டையை விலக்கிவிட்டார்கள். நான் வீட்டிற்கு சென்றபோது எனக்கு எதிரே எனது மகன் தமிழ்செல்வனும் வந்தார். அப்போது ஆஜர் எதிரி ரஞ்சித் என்னை பார்த்து இன்றைக்கு தப்பித்துவிட்டாய் என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். எனது மகன் தமிழ்செல்வனுடன் திருவிடைமருதூர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். ( அ ந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**<u>மறுவிசாரணை.</u>** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**